தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி

விடுநர்
டாக்டர். மா. ஆர்த்தி இ.ஆ.ப.,
மாநிலத் திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை 600006.

பெறுநர்
முதன்மைக்கல்வி அலுவலர்கள்,
அனைத்து மாவட்டங்கள்.

ந.க.எண்:129/ஆ3/கலை/ஒபக/2023, நாள்:13 .07.2023

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – 2023-2024ஆம் கல்வியாண்டில் முதற்கட்டமாக அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6–9 வகுப்பு மாணவர்களுக்கு கலை அரங்கம் தொடங்குதல் – வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் சார்ந்து.

பார்வை : 2022-23ஆம் ஆண்டில் சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு.

***********************

2022-23ஆம் ஆண்டு சட்டமன்ற கூட்டத்தொடரில் பள்ளிக் கல்வித்துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்காணும் அறிவிப்பினை அறிவித்துள்ளார்.

" *மாணவர்களின் கலைத் திறன்களை வெளிக்கொணரும் விதமாக அரசுப் பள்ளிகளில் பயிலும் இலட்சக்கணக்கான மாணவர்கள் பயன்பெறும் வகையில் பள்ளி, வட்டாரம், மாவட்டம் மற்றும் மாநில அளவில் கலைத் திருவிழா நடத்தப்படும்.*"

இவ்வறிவிப்பினை தொடர்ந்து, தமிழகத்தில் உள்ள பல்வேறு கலை வடிவங்களை அறிமுகப்படுத்தி, மாணவர்களின் கலைத் திறன்களை வெளிகொணரும் விதமாகவும் கலைப் பண்பாட்டு கொண்டாட்டங்களை ஒருங்கிணைக்கவும் அரசு பள்ளி மாணவர்களுக்கு கலை அரங்கம் பயிற்சி 2022–23ம் ஆண்டு வழங்கப்பட்டது. இதன் முலம் 28.5 இலட்சம் மாணவர்கள் –சிறப்பு கவனம் தேவைப்படும் குழந்தைகள்(CWSN) உட்பட 206

கலைத்திருவிழா போட்டிகளில் ஆர்வமுடன் கலந்து கொண்டும் மாநில அளவில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் கலை அரசி, கலை அரசன் மற்றும் பல பரிசுகள் வழங்கப்பட்டது.

**கலை அரங்கம் 2023 – 2024**

கடந்த ஆண்டைப் போலவே, இவ்வாண்டும் அனைத்து அரசு, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 9 வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 5 கலை வடிவங்களில் – நடனம், நாட்டுப்புறகலை, இசை, காட்சிக்கலை, நாடகம் மற்றும் பொம்மலாட்டம் ஆகியவற்றில் பயிற்சி வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

**கைப்பேசி செயலி ( Mobile App )**

2023–24ல் மாணவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பள்ளிகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட உள்ள கலை வடிவங்கள், அக்கலை வடிவங்களை கற்பிக்க அப்பள்ளிக்கு தேவையான கலைஞர்களின் எண்ணிக்கை, கலைஞர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகள் விவரம் மற்றும் பல விவரங்கள் கைப்பேசி செயலி வாயிலாக மேற்கொள்ளப்பட உள்ளது. இச்செயலியானது தற்போது இறுதி கட்ட பரிசோதனையில் உள்ளமையால், அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் (Art Education & Music), முழு நேர வாய்ப்பாட்டு ஆசிரியர்கள் மற்றும் கலை சார்ந்த ஆசிரியர்கள் ஆகியோரை பயன்படுத்தி முதற்கட்டமாக அவர்கள் பணியாற்றும் பள்ளிகளில் கலை அரங்கம் பயிற்சி நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது.

EMIS தரவுதளம் வாயிலாக பெறப்பட்டுள்ள, 5038 அரசு பள்ளிகளில் பணியாற்றும் பகுதி நேர ஆசிரியர்கள் மற்றும் முழு நேர கலை ஆசிரியர்கள் விவரம் பின்வருமாறு வழங்கப்படுகிறது.

| வ.எண் | வகைகள் | பகுதி நேர ஆசிரியர்கள் ஆசிரியர்களின் எண்ணிக்கை | முழு நேர கலை ஆசிரியர்கள் எண்ணிக்கை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | Art Education | 3787 | 356 | 4143 |
| 2. | Drawing | 14 | 1076 | 1090 |
| 3. | Music | 359 | 317 | 676 |
| 4. | Work Education- Sewing | 1718 | 422 | 2140 |
| | Total | **5878** | **2171** | **8049** |

மாவட்ட வாரியாக அரசு பள்ளிகளில் உள்ள கலை சார்ந்த ஆசிரியர்கள் பணிபுரியும் பள்ளிகளின் எண்ணிக்கை விவரம்:

| வ.எண் | மாவட்டங்கள் | கலை சார்ந்த ஆசிரியர்கள் |
|---|---|---|
| 1 | அரியலூர் | 86 |
| 2 | சென்னை | 160 |
| 3 | செங்கல்பட்டு | 113 |
| 4 | கோயம்புத்தூர் | 190 |
| 5 | கடலூர் | 187 |
| 6 | தர்மபுரி | 166 |
| 7 | திண்டுக்கல் | 153 |
| 8 | ஈரோடு | 153 |
| 9 | கள்ளக்குறிச்சி | 176 |
| 10 | காஞ்சிபுரம் | 102 |
| 11 | கன்னியாகுமரி | 97 |
| 12 | கரூர் | 95 |
| 13 | கிருஷ்ணகிரி | 182 |
| 14 | மதுரை | 161 |
| 15 | மயிலாடுதுறை | 63 |
| 16 | நாகப்பட்டினம் | 83 |
| 17 | நாமக்கல் | 149 |
| 18 | பெரம்பலூர் | 60 |
| 19 | புதுக்கோட்டை | 163 |
| 20 | ராமநாதபுரம் | 89 |
| 21 | ராணிப்பேட்டை | 115 |
| 22 | சேலம் | 277 |
| 23 | சிவகங்கை | 93 |
| 24 | தென்காசி | 67 |
| 25 | தஞ்சாவூர் | 145 |
| 26 | நீலகிரி | 51 |
| 27 | தேனி | 87 |
| 28 | தூத்துக்குடி | 48 |
| 29 | திருச்சிராப்பள்ளி | 184 |
| 30 | திருநெல்வேலி | 64 |
| 31 | திருப்பத்தூர் | 83 |
| 32 | திருப்பூர் | 135 |
| 33 | திருவள்ளூர் | 212 |
| 34 | திருவண்ணாமலை | 286 |
| 35 | திருவாரூர் | 133 |
| 36 | வேலூர் | 104 |
| 37 | விழுப்புரம் | 196 |
| 38 | விருதுநகர் | 130 |
| | மொத்தம் | 5038 |

பள்ளிவாரியாக உள்ள மேற்காண் ஆசிரியர்களின் விவரங்கள் கொண்ட QR code மற்றும் லிங்க் இணைப்பு–1ல் வழங்கப்பட்டுள்ளது. இதனை ஸ்கேன் செய்து காணலாம். இப்பள்ளிகளில் காட்சிக்கலைகள் (Visual Arts) – வரைதல் (Drawing),

ஓவியம் (Painting), காகித வேலை (Origami), புகைப்படம் (Photography), காணொளி தொகுப்பாக்கம் (Video Editing), காணொளி படப்பிடிப்பு, (Video Shooting), Craft (கைவினைப் பொருட்கள்), சிற்பக்கலை (Sculpture) மற்றும் வாய்பாட்டு கலைகளுக்கான கலை அரங்கம் பயிற்சியினை வழங்கப்பட வேண்டும்.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் முதற்கட்டமாக 5038 அரசு பள்ளிகளில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கலை சார்ந்த ஆசிரியர்கள் வாயிலாக 17.07.2023 முதல் கலை அரங்கம் பயிற்சி தொடங்கி நடத்தப்படுதல் வேண்டும்.

<u>பாட வேளை ஒதுக்கீடு</u>

வாரத்திற்கு ஒருமுறை பள்ளிக் கல்வி துறையால், வழங்கப்பட்டுள்ள பாடவேளை அட்டவணையில், கல்விசாரா செயல்பாட்டின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள "Art & Culture" இரு பாடவேளைகளில் இப்பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட வேண்டும்.

<u>பாடத்திட்டம்</u>

இத்துடன் காட்சிக் கலைகள் மற்றும் வாய்பாட்டுக்கென இணைப்பில் இணைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தினை பின்பற்றி மாணவர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பாட வேளையில் கற்பித்தல் வேண்டும்.

<u>செயல்முறை திட்டம்</u>

- மேற்கூறப்பட்ட பகுதிநேர/ முழுநேர ஆசிரியர்கள் தவிர்த்து, ஒவ்வொரு பள்ளியிலும் கலையில் ஆர்வமுள்ள ஓர் ஆசிரியரை கலை அரங்கம் சார்ந்த அனைத்து செயல்பாடுகளையும் ஒருங்கிணைக்க ஏதுவாக, **கலை ஒருங்கிணைப்பாளராக** பள்ளி தலைமையாசிரியர்களால் நியமிக்கப்பட வேண்டும்.
- 6 முதல் 9 ஆம் வகுப்பு மாணவர்கள் அனைவரையும் சேர்த்து 40 பேர் கொண்ட குழுவாக அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். உதாரணமாக, ஓர் பள்ளியில் 80 மாணவர்கள் இருப்பின், 2 கலை குழுக்கள் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும், இதுபோல் அனைத்து பள்ளிகளிலும் மாணவர்களின் எண்ணிக்கையை பொருத்து குழுக்களை அமைத்துக் பயிற்சி வழங்க வேண்டும். அச்சமயம், சார்ந்த வகுப்பு ஆசிரியர்களும் உடன் இருத்தல் வேண்டும். எனவே, மாணவர் கலைக் குழு பள்ளியில் பணிபுரியும் கலை

ஆசிரியரின் எண்ணிக்கை மற்றும் வழங்கப்படவுள்ள கலை வடிவம் பொருத்து அமைக்கப்பட வேண்டும்.

- சில பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்டு கலை சார்ந்த ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அவ்வாறு உள்ள பள்ளிகளில் உள்ள ஆசிரியர்கள் ஒருங்கிணைந்து மாணவர்களுக்கு உரிய கலையினை கற்று தருதல் வேண்டும்.

**இசை மற்றும் காட்சிக்கலை ஆசிரியர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்**

**I. இசை ஆசிரியர்**

- இசைக் கலை அரங்கம் பாடவேளையில், இணைப்பு-2ல் வழங்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தினை ஆசிரியர் பதிவிறக்கம் செய்து முன்னதாக மாணவர்களுக்கு பயிற்றுவிக்க ஏதுவாக தன்னை தயார்படுத்தி கொள்ளுதல் வேண்டும்.
- இசைக் கலை அரங்கம் பாட வேளையில், மாணவர்களள் கூச்சமின்றி கற்றுக்கொள்ள ஊக்கப்படுத்திடும் செயல்பாடுகள் வழங்குதல் வேண்டும்.
- இசையின் வடிவத்தின் அடிப்படை தகவல்கள் , முக்கியத்துவங்கள் சிறப்பம்சங்கள், பரிமாணங்கள் மற்றும் அதன் பயன்பாடு போன்ற பல்வேறு தகவல்களை விவரிக்க வேண்டும் (மாணவர்களுடன் உரையாடலாகவும் செயல்படுத்தலாம்)
- இந்த பாடத்திட்டத்தில் உள்ள பாடலை பற்றி விவரிக்க வேண்டும்
- ஆசிரியர் அந்த பாடலை பாடிக் காண்பிக்க வேண்டும், பின்பும் மாணவர்களை சிறு குழுக்களாக பிரித்து பாடலை பாட கற்பிக்க வேண்டும்.

**II. காட்சிக்கலை ஆசிரியர்**

- மாணவர்களுக்கு காட்சிக் கலையின் அடிப்படை தகவல்கள், வகைகள் மற்றும் பயன்பாடு போன்ற பல்வேறு தகவல்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டும் (மாணவர்களுடன் உரையாடலாகவும் செயல்படுத்தலாம்).
- காட்சிக் கலை பாடவேளையில் இணைப்பு-3ல் கொடுக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை ஆசிரியர் பதிவிறக்கம் செய்து முன்னதாக மாணவர்களுக்கு பயிற்றுவிக்க ஏதுவாக தன்னை தயார்படுத்தி கொள்ளுதல் வேண்டும்.

**உதாரணம்:**

- காட்சிக் கலை பாடதிட்டத்தில் முகமூடி செய்தல் குறித்து வழங்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் இது சார்ந்த ஒரு அடிப்படை தகவலை மாணவர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

- படிப்படியாக முகமூடி எவ்வாறு செய்தல் வேண்டும் என்பது குறித்து மாணவர்களுக்கு கற்றுக் கொடுத்தல் வேண்டும்.
- கூறான பொருட்களை மாணவர்கள் பாதுகாப்பாக கையாள்வதை உறுதி செய்தல் வேண்டும்.
- குழுக்கள் செயல்பாட்டினை முடித்த பின் அனைத்து குழுக்களையும் தாங்கள் தயாரித்த முகமுடியினை பிற குழுக்களுக்கு காண்பித்து ஒவ்வொன்றாக அனைவருக்கும் காண்பித்து தங்களின் அனுபவத்தை பகிர்ந்து கொள்ள செய்தல் வேண்டும்.
- ஆசிரியர் மாணவர்களை ஊக்கவிக்கும் விதமாக கரஒலி எழுப்பி உற்சாகபடுத்த வேண்டும்.

**<u>பிற கலை வடிவங்களில் பயிற்சி:</u>**

கலை அரங்கம் செயல்பாட்டிற்கென பிரத்தியேகமாக உருவாக்கப்பட்டு வரும் கைப்பேசி செயலியின் பணிகள் நிறைவு பெற்றப்பின் பிற பள்ளிகளுக்கான கலை அரங்கம் அமைத்தல் மற்றும் 5038 பள்ளிகளில் வழங்கப்பட வேண்டிய பிற கலை வடிவங்களின் விவரங்கள் தெரிவிக்கப்படும்.

**<u>கண்காணித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்</u>**

**<u>(I) ஒன்றிய அளவில்</u>**

- அனைத்து ஒன்றியங்களிலும் பணியாற்றும் மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பள்ளிகளில் 8049 பள்ளிகள் இருப்பின், அப்பள்ளிகளை பார்வையிட்டு, மேற்கூறியவாறு கலை அரங்கம் அமைத்தலில் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு உதவி செய்தல் வேண்டும். மேலும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தின்படி மாணவர்களுக்கு கற்பிக்கப்படுதலை உறுதி செய்தல் வேண்டும். இவ்விவரங்களை பள்ளிப்பார்வை செயலியில் பதிவு செய்தல் வேண்டும்.

**<u>(II) மாவட்ட அளவில்</u>**

- மாவட்ட அளவில் முதன்மைக் கல்வி அலுவலர்கள், உதவி திட்ட அலுவலர்கள்(DPO), மாவட்ட கல்வி அலுவலர், வட்டார கல்வி அலுவலர்கள் 8049 பள்ளிகளில் கலை அரங்கம் செயல்படுவதனை உறுதி செய்து பள்ளிப்பார்வை செயலியில் பதிவு செய்தல் வேண்டும்.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்களும் மேற்காண் வழிமுறைகளை பின்பற்றி கலைஅரங்க பயிற்சியினை அரசு பள்ளி மாணவர்களுக்கு வழங்கிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு:1, 2 மற்றும் 3.

13/07/2023

மாநில திட்ட இயக்குநருக்காக

**நகல்**

1. இயக்குநர், பள்ளிக் கல்வி, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை–600006.
2. இயக்குநர், தொடக்கக் கல்வி, பேராசிரியர் அன்பழகன் கல்வி வளாகம், சென்னை–600006.

**(முதன்மைக் கல்வி அலுவலர் வழியாக)**

1. மாவட்ட கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்.
2. வட்டார கல்வி அலுவலர்கள், அனைத்து ஒன்றியங்கள்.
3. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்.
4. வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள், அனைத்து ஒன்றியங்கள்.
5. அனைத்து ஆசிரியர் பயிற்றுநர்கள், அனைத்து ஒன்றியங்கள்.
6. சார்ந்த அனைத்து பள்ளி தலைமை ஆசிரியர்கள்.

இணைப்பு-1

https://rb.gy/zd7y0

Kalai Arangam Teachers details

இணைப்பு -2

https://rb.gy/obsq0

Music Course materials

இணைப்பு –3

https://rb.gy/qv4p9

Visual Arts Course materials